# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 11

சுட்டெண்:........................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. நெஞ்சை அள்ளும் மணியாரம் என்று புகழப்படுவது.

அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம்
இ) குண்டலகேசி ஈ) வளையாபதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தேன்நிலா என்பது

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. ஓங்குபுகழ் கற்கள் என அழைக்கப்படுவது

அ) வைரக்கல் ஆ) சிற்பக்கல்
இ) நடுகல் ஈ) சூளைக்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. புத்தரின் படுகொலை என்ற கவிதை வரியை எழுதிய கவிஞர்

அ) எம். ஏ. நுஃமான் ஆ) ஏ. ஐ. குணதிலக்க
இ) ஆரியரெட்ண ஈ) குணரெட்ண

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) ஓடு ஓடு ஆ) சின்னஞ்சிறிய இ) படபட ஈ) நடநட

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. கோவலன் மாதவியின் யாழை வாங்கிப் புகழ்ந்து பாடிய ஆறு

அ) கங்கை ஆ) காவேரி
இ) யமுனை ஈ) சிந்துநதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சிலப்பதிகாரத்தில் காய் கதிர்ச்செல்வன் எனக் குறிப்பிடப்படுவது

அ) சந்திரன் ஆ) கதிரவன் இ) தீ ஈ) நட்சத்திரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. அல்வழித்தொகை

அ) ஆறு ஆ) ஏழு இ) ஐந்து ஈ) எட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. மலையின் கண் அருவி. இதில் வந்துள்ள வேற்றுமை

அ) மூன்றாம் வேற்றுமை ஆ) ஐந்தாம் வேற்றுமை
இ) நான்காம் வேற்றுமை ஈ) ஏழாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஒருவனைத் தமிழன் என்று உறுதி செய்வது

அ) உடை ஆ) நடை இ) உணவு ஈ) மொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இனியும் என்ற புதுக்கவிதையை இயற்றியவர்

அ) உதயை வீரையன் ஆ) இரவி
இ) அம்பி ஈ) இளந்திரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பூவனம் என்ற சொல் குறித்து நிற்பது.

அ) காடு ஆ) தோட்டம் இ) வயல் ஈ) பூஞ்சோலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. யாழ் நூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு

அ) 1981 ஆ) 1881 இ) 1781 ஈ) 1991

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கன்னங்கரிய என்பது

அ) அடுக்குத்தொடர் ஆ) அடுக்கிடுக்குத்தொடர்
இ) இரட்டைக்கிளவி ஈ) உவமைத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. "குடிப்பது கூழ் கொப்புளிப்பது பன்னீர்" என்ற பழமொழி குறிப்பது.

அ) முயற்சி ஆ) சிக்கனம்
இ) ஆடம்பரம் ஈ) முன்னேற்பாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் மண்ணின் மேல் போக்கியவள்

அ) கண்ணகி ஆ) மாதுரி இ) ஐயை ஈ) மாதவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பின்வருவனற்றுள் வினையெச்சம்

அ) வந்த ஆ) வந்து இ) சென்ற ஈ) சென்றான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. வைகறைப் பொழுது என்பது

அ) மாலைப்பொழுது ஆ) காலைப்பொழுது
இ) அதிகாலைப்பொழுது ஈ) இராப்பொழுது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. அரசியின் சிலம்பைத் திருடியவன்

அ) பொற்கொல்லன் ஆ) கோவலன் இ) மாடலன் ஈ) சேவகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ''தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்'' இதில் கொழுநன் எனக்குறிப்பிடப்படுபவன்

அ) அரசன் ஆ) தந்தை இ) கணவன் ஈ) நண்பன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. 'குதிரை ஓட்டினான்' என்பதில் மறைந்திருக்கும் வேற்றுமை உருபு

அ) முதலாம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை

இ) நான்காம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. உம்மைத் தொகைக்கு எடுத்துக்காட்டு

அ) தேன் மொழி ஆ) இராப்பகல்

இ) தண்ணீர் ஈ) விளைபயிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ''சத்தியமாய் நான் அந்தக் கல்லுக்குள் இல்லையடா'' என்ற வரிகள் இடம்பெற்ற கவிதை

அ) ஓடிடும் தழிழா ஆ) இனியும்

இ) ஓங்குபுகழ்கற்கள் ஈ) மானிடாசொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பின்வருவனவற்றுள் சினைப்பெயர்

அ) இலை ஆ) வெள்ளை

இ) யாழ்ப்பாணம் ஈ) பொங்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பாங்கி என்ற சொல் குறித்து நிற்பது

அ) அம்மாவை ஆ) அக்காவை

இ) நண்பியை ஈ) தங்கையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. சிலப்பதிகாரக் கதையின் கருவாக அமைந்திருப்பது.

அ) கோவலன் ஆ) கண்ணகி

இ) மாதவி ஈ) சிலம்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. வினைத்தொகைக்கு எடுத்துக்காட்டு

அ) காய்கறி ஆ) வேல்விழி இ) கடிநாய் ஈ) வட்டக்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ஆத்தொழில் புரிபவர்

அ) பாணர் ஆ) விறலியர் இ) உழவர் ஈ) ஆயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இறைவன் விரும்புவது

அ) பொன்னை ஆ) பொருளை இ) அன்பை ஈ) பணத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. யாழ் நூலகத்தைத் தொடக்கி வைத்தவர்

அ) சாம். சபாபதி ஆ) க. மு. செல்லப்பா

இ) ஐசாக். தம்பையா ஈ) கே. நரசிம்மன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. யாழ் நூலகம் எரிவதை அறிந்து அதிர்ச்சியில் உயிர்விட்ட தமிழ் ஆர்வலர் யார்?

______________________________________

______________________________________

2. இறைவன் விரும்பும் கோவில் எது?

______________________________________

______________________________________

3. பாண்டிய மன்னன் உயிர் விடும்போது இறுதியில் உரைத்தவை யாவை?

______________________________________

______________________________________

4. தலைக்கோல் என்றால் என்ன?

______________________________________

______________________________________

5. ''யானைக்கும் அடிசறுக்கும்'' இப்பழமொழி விளக்குவது எதை?

______________________________________

______________________________________

6. அம்பியின் பாடலில் எதை விட்டு விட்டு ஓடாதே என்று கூறப்படுகிறது ?

______________________________________

______________________________________

7. கோவலன் கொலையுண்ட போது ஆயர்பாடியில் தோன்றிய தீக்குறிகள் இரண்டினைத் தருக.

______________________________________

______________________________________

புள்ளிகள் 10

3) **பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து 08 வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. வீசுங்காற்றே கொஞ்சம் நில்லு.....

2. உனை என்றும் மறப்பேனோ......

3. தாய்மொழியைப் பேசத்தடை என்ன உனக்கு.....

புள்ளிகள் 10

4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

வேலும் வாளும் உண்டாக்கிய குருதிக்கடலில் பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும் பகைவர்களின் தலைகளைப் பார்த்து மகிழ்ந்தபடி எஞ்சிய வீரர்களை நெஞ்சுரம் கொள்ளச் செய்கிறான் தலைவன். எந்த நேரம் எந்தப் பக்கம் இருந்து ஈட்டி பாயுமோ? எதிரியின் கணை(அம்பு) பாயுமோ? என்ற சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பதும் வீரர்களுக்கு அழகில்லை. இப் போர்க்களத்து அரிச் சுவடியைத் தவறியும் மறந்து விடாமல் மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு என்ற மனவலிமையோடு படையை நடத்திச் செல்கின்றான் படைத்தலைவன்.

அவன் தலைமையில் அணிவகுத்து நிற்கின்றது படையணிகள். பகைப்புலத்தை முற்றுகை இடுகிறது. கோட்டையை அழிக்கவும் கொடிகளை வீழ்த்தவும் முன்னேறுகின்றது. சூழ்ந்து வந்த படையைச் சுக்கு நூறாக்குகின்றது. போர்களம் சென்று அவன் உடலில் விழுப்புண் அடையாத நாட்கள் எல்லாம் அவன் வாழ்வில் வீணான நாட்களே என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க விழுப்புண்படுகின்றார்கள் எம் வீரர்கள். வீழ்ந்து கிடக்கின்றன பகைவரின் கோட்டையும் எதிரிகளின் உடல்களும்.

ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான் ஆனது ஆகாட்டும் என்று மீண்டும் அணியமாகின்றது தமிழர்படை. அதோ நமது பகைவன். ‘‘விழுப்புண்களை விலையாகக் கொடுத்து வெற்றிக் கனிகளைப் பெற்றிடுவோம் வாரீர்!’’ எமது மண்ணைச் சுற்றி நிற்கின்றது எதிரியின் படை. அதனை அழித்துப் பொடிப் பொடியாக்குவோம். உங்கள் விழிகள் பகைவர்களைப் நோக்கி சினங்கொப்பளிக்கத் திறக்கட்டும்.

1. வெற்றிக் கனிகளைப் பெற எதை விலையாகக் கொடுக்கவேண்டும் எனக் கூறப்படுகின்றது?

______________________________

______________________________

2. வீரர்களுக்கு எது அழகில்லை எனக் கூறப்படுகின்றது?

______________________________

______________________________

3. யார் தலைமையில் படை அணிவகுத்து நிற்கின்றது?

______________________________

______________________________

4. மாவீரனுக்கு மலர்ச்செண்டாக அமைவது எது?

______________________________

______________________________

5. ஒருவரின் வாழ்க்கையில் வீணான நாட்களாக எவற்றை வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. வேற்றுமைத்தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டு ஒன்று தருக.

2. பின்வரும் மரபுச்சொற்களை வைத்து சொல்லியங்கள் எழுதுக.

அ) மேடுபள்ளம்:-

ஆ) பச்சைப்பசேல்:-

3. அல்வழித்தொகை எத்தனை வகைப்படும்?

அவற்றின் பெயர்களைத் தருக.

4. வேற்றுமை உருபுகள் எத்தனை?

5ம் வேற்றுமை உருபுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

5. மாறுபடு புணர்ச்சிகள் எத்தனை?

ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து; மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

அன்று மழைநாள். முற்றத்தில் வெள்ளம் நின்றது. நான் அதைப்பார்த்துக் கொண்டு நின்றேன். பக்கத்து வீட்டுச் சிறுவர் வெள்ளத்தில் காகிதத்தில் கப்பல் செய்து விட்டுக் கொண்டிருந்தனர். மழை பெய்து கொண்டே இருந்தது. அப்பொழுது அழகான நீர்க்குமிழிகள் தோன்றின. ஆனால் அவை தோன்றிய சிறிது நேரத்திலே மறைந்து விட்டன. அவை மறைய மறைய புதுப்புது நீர்க்குமிழிகள் தோன்றியும் மறைந்தும் கொண்டிருந்தன. அப்பொழுது என் மனதில் ஓர் எண்ணம் எழுந்தது. மாந்தனின் வாழ்க்கையும் இப்படித்தான். எதுவுமே இந்த உலகத்தில் நிலையற்றது. நிலையற்ற இந்த உலக வாழ்க்கையை மாந்தன் நிலையானது என எண்ணுகிறான். அதற்காகப் பேராசைப்பட்டு தன் மகிழ்ச்சியைத் தானே அழித்துக்கொள்கிறான். ஒருவன் மீது ஒருவன் பொறாமை கொள்கின்றான். அன்பினால் இணைந்திருக்க மறுக்கின்றான், மறக்கின்றான். தன் நிம்மதியைத் தானே தொலைக்கின்றான். குறைந்த வாழ்க்கைக் காலத்தில் நிறைந்த வாழ்வை வாழ மாந்தன் எப்போது தயாராகின்றானோ அப்போது தான் இந்த உலகம் அவனுக்கு இன்பமயமானதாக அமையும்.

**சுருக்கத்திற்கான குறிப்புக்கள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ சிலப்பதிகாரத்தில் உமக்குப் பிடித்த கதைநாயகர் (பாத்திரம்) யார்? ஏன்?

★ இக்காலக் கவிதை பற்றிய உமது கருத்தும் பாடநூலில் உம்மைக் கவர்ந்த கவிதையும்.

★ நீர் தமிழ் கற்பதன் நோக்கம்.

புள்ளிகள் 20